

# ஆதித் தமிழன்

## செருப்பு தைப்போர் மறுவாழ்வு மாநாடு சிறப்பு மலர்







**இடம் :**
**மல்லிகை அரங்கம்,**
**வ.உ.சி. பூங்கா அருகில்,**
**ஈரோடு.**

**நாள் : 14.04.2010**

www.aathithamizharperavai.com{

# ஆதித் தமிழன்

திங்களேடு

அருந்ததியர்களின் அறிவாயுதம்

ஆசிரியர் : சுப. இளங்கோவன்

நிறுவனர் : இரா. அதியமான்

பொறுப்பாசிரியர் : கருவை சிந்தனைச் செல்வன்

| தனிச்சுற்றுக்கு மட்டும் | திருவள்ளுவராண்டு 2041 | பிப்ரவரி - மார்ச் 2010 | ஏடு - 8,9 |
|---|---|---|---|

# சாதியை ஒழிக்க யாரை வீழ்த்துவது?

"சாதி என்பது, இந்துக்கள் ஒருவரோடொருவர் கலந்து விடாமல் தடுக்கிற ஒரு செங்கல் சுவரோ, முள் வேலியோ அல்ல. அப்படி சாதி வெறும் சுவராகவோ, வேலியாகவோ இருந்தால் அதை தகர்த்துவிடலாம். சாதி என்பது ஒரு கண்ணோட்டம் , ஒரு மனநிலை. எனவே, சாதியைத் தகர்ப்பது என்றால், வெறும் பவுதிகத் தடையைத் தகர்ப்பது என்பது அல்ல. மாறாக ஒரு சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்துவதாகும். சாதியைக் கடைபிடிப்பதில் மக்களின் தவறு எதுவுமில்லை.

சாதி என்கிற கண்ணோட்டத்தை இந்துக்களின் மனதில் ஆழமாகப் பதிய வைத்து இருக்கிற இருந்து மதத்தின் மீதே தவறிருப்பதாக நான் கருதுகிறேன். என்னுடைய இந்த கருத்து சரியானதென்றால், நீங்கள் வீழ்த்த வேண்டிய எதிரி, சாதியை கடைபிடிக்கும் மக்கள் அல்ல; சாதிகளின் மதமான இந்து மதத்தை மக்களுக்குக் கற்றுத் தந்திருக்கிற சாஸ்திரங்களே உங்கள் பயங்கர எதிரி."

என்னைப்போன்றவர்களையே நான் உருவாக்க நினைக்கிறேன்.

ஒரு பள்ளியின் ஆசிரியர், ஒரு 'மகர்' மாணவனைப் பார்த்து, 'ஏய் யார் நீ? இந்த சாதியைச் சார்ந்தவன் முதல் தேர்ச்சி பெற முடியுமா? உனக்கு எதற்கு முதல் வகுப்பு? நீ மூன்றாம் வகுப்பிலேயே இரு. முதல் வகுப்பெடுப்பது பார்ப்பனுடைய வேலையல்லவா? என்று கேட்டால், அந்த மாணவன் என்ன விதமான புத்துணர்வை பெற முடியும்? அவன் எப்படி முன்னேற முடியும்? புத்துணர்வை உருவாக்குவதற்கான அடிப்படை அவனுடைய மனதில் உருவாக்கப்பட வேண்டும். உடலாலும் மனதாலும் ஆரோக்கியமாக இருந்து அதன் மூலம் துணிவாகவும் தன்னம்பிக்கையுடனும் வெற்றி பெறும்போது தான் அவன் புத்துணர்வு பெற முடியும். ஆனால், தாழ்வு மனப்பான்மையை இந்து மதம் அவனுள் புகுத்தியிருக்கிறது. அது ஒருபோதும் புத்துணர்வை வளர்க்காது. இத்தகைய தாழ்வு மனப்பான்மையும், புத்துணர்வின்மையும் பல ஆயிரம் ஆண்டுகளாக அவன் மீது திணிக்கக் கூடிய அளவுக்கு சூழல்கள் அமைந்திருக்கின்றன. இத்தகைய மனிதர்கள் 'கிளார்க்' வேலைகள் மூலம் தங்கள் வயிற்றைத்தான் நிரப்பிக் கொள்ள முடியும். வேறு என்ன நடக்கும்?

மனிதனின் புத்துணர்வுக்குப் பின்னால் இருப்பது அவனுடைய உள்ளம். ஆலைகளின் உரிமையாளர்களை உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்கள் தங்களுடைய ஆலைகளுக்கு மேலாளர்களை நியமித்து, தங்கள் ஆலைகளை நடத்துகிறார்கள். இந்த ஆலை உரிமையாளர்கள் பல்வேறு தீய பழக்கங்களுக்கு ஆட்பட்டு, அவர்கள் பண்படாதவர்களாகவே இருந்து வருகிறார்கள். நாம் தொடங்கியிருக்கும் இந்த இயக்கம் உங்கள் மனதில் புத்துணர்வை ஏற்படுத்தக்கூடிய பணியைச் செய்கிறது. அதன் பிறகு கல்வி அளிக்கப்பட வேண்டும். நான் கல்வி கற்கத் தொடங்கியபோது கிழிந்த துணிகளையே உடுத்தியிருந்தேன். பள்ளியில் எனக்கு குடிப்பதற்கு தண்ணீர் கூட கிடைக்காது. பல நாட்கள் தண்ணீர் இன்றி நான் பள்ளியில் இருந்திருக்கிறேன். பம்பாயில் உள்ள எல்பின்ஸ்டன் கல்லூரியிலும் இதே சூழல்தான் நிலவியது. இத்தகைய சூழலில் வேறு எந்த மாதிரியான நிலைமைகளை உருவாக்க முடியும்? வெறு கிளார்க்குகளைத்தான் உருவாக்க முடியும்.

நான் டெல்லி வைசிராய் குழுவில் இருந்தபோது லின்லித்கோதான் வைசிராயாக இருந்தார். முஸ்லிம்களுக்கு கல்வி அளிக்க அலிகார்



பல்கலைக்கு வழக்கமான செலவுகளோடு கூடுதலாக மூன்று லட்சம் ரூபாய் செலவழியுங்கள். அதே போல, மூன்று லட்ச ரூபாயை இந்து பனாரஸ் பல்கலைக்கு வழங்குங்கள். ஆனால், நாங்கள் இந்துக்களோ, முஸ்லிம்களோ அல்ல. நீங்கள் எங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தால், அவர்களுக்கு செய்ததைப் போல ஆயிரம் மடங்கு அதிகமாக செய்ய வேண்டும். முஸ்லிம்களுக்கு செய்கின்ற அளவுக்காவது எங்களுக்கு செய்யுங்கள் என்று சொன்னேன். அதற்கு லின்லித்கோ, நீ என்ன சொல்வதாக இருந்தாலும் அதை எழுதிக்கொடு என்று சொல்லிவிட்டார். எனவே, அதை அப்படியே நான் ஒரு கோரிக்கை மனுவாகத் தயாரித்தேன். அந்த நகல் என்னிடம் அப்படியே இருக்கிறது. அய்ரோப்பியர்கள் மிகவும் கருணை உள்ளவர்கள். அவர்கள் என்னுடைய வரைவுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனால், எந்த வேலைக்காக அந்த பணம் செலவழிக்கப்பட வேண்டும் என்பதுதான் பிரச்சினை. நமது பெண்கள் கல்வி கற்கவில்லை என்பதால், அவர்களுக்கு கல்வி வழங்க வேண்டும் என்று அவர்கள் எண்ணினார்கள். அவர்களுக்கென்று விடுதிகள் தொடங்கப்பட்டன. அதற்காக பணம் செலவழிக்கப்பட்டது. நம்முடைய பெண்களுக்கு கல்வி வழங்கப்பட்டு அதன் மூலம் அவர்கள் படித்த பிறகு, வீட்டில் பல்வேறு வகையான உணவுகளை தயாரிப்பது யார்? அவர்களுடைய கல்வியின் ஒட்டு மொத்த விளைவு என்ன? அரசு பல்வேறு பிரிவுகளின் கீழ் பணத்தை செலவழித்தது. ஆனால், கல்விக்காக, பணத்தை அவர்கள் செலவழிக்கவில்லை.

எனவே, நான் ஒரு நாள் லார்ட் லின்லித்கோவிடம் சென்று கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை என்னவாயிற்று என்று கேட்டேன். மேலும் நீங்கள் கோபப்படவில்லையென்றால், நான் உங்களிடம் ஒரு கேள்வியை கேட்க விரும்புகிறேன். நான் மட்டுமே அய்ம்பது பட்டதாரிகளுக்கு சமமானவன் இல்லையா? என்றேன். அவர் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. மீண்டும் நான் அவரிடம் கேட்டேன். இதற்கு என்ன காரணம்? எனக்கு அதற்கான காரணம் தெரியவில்லை என்றார். என்னுடைய படிப்பு அவ்வளவு மகத்தானது. என்னால் அரண்மனையின் உச்சியில் அமர முடியும். என்னைப் போன்ற மக்களைத் தான் நான் உருவாக்க நினைக்கிறேன். நம்முடைய மக்கள் பாதுகாக்கப்பட வேண்டிய வகையில் அறிவார்ந்த மாணவர்களை உருவாக்கப்பட வேண்டும். வெறும் எழுத்தரால் என்ன செய்ய முடியும்? நான் சொன்ன அந்த நிமிடமே லார்ட் லின்லித்கோ ஒப்புக்கொண்டு, பதினாறு மாணவர்களை உயர் படிப்புக்காக இங்கிலாந்துக்கு அனுப்பினார். இந்தப் பதினாறு பேரில் சிலர் அரைவேக்காடுகளாகவும் சிலர் முழு அறிவாளிகளாவும் இருக்கக் கூடும். அது வேறு பிரச்சினை. ஆனால் அதன் பிறகு சி. ராசகோபாலாச்சாரி, இத்தகு உயர் கல்வித் திட்டத்தையே ரத்து செய்து விட்டார்.

( **15.10.1956** அன்று மாபெரும் மதமாற்ற நிகழ்வையொட்டி ஆற்றிய உரை)

சனநாயக அரசு வேண்டுமெனில் சமூகம் சனநாயகமாக்கப்பட வேண்டும்.

பல்வேறு வகையான அரசு முறைகளை வரலாறு கண்டிருக்கிறது. முடியாட்சி, பிரபுக்கள் ஆட்சி, மக்களாட்சி என்பவற்றுடன் சர்வாதிகார ஆட்சியையும் இணைத்துக் கொள்ளலாம். தற்காலத்தில் மிகவும் பரவலாகக் காணப்படுவது சனநாயகம். இருப்பினும், சனநாயகம் என்றால் என்ன என்பது பற்றிய கருத்தொற்றுமை இல்லை. ஒரு சமூகம் தனது வடிவிலும் அமைப்பிலும் சனநாயக முறையில் இல்லை என்றால், அந்த சமூகத்திற்காக செயல்படும் அரசு சனநாயக அரசாக இருக்க முடியாது. சனநாயகம் என்பது தேர்தல்கள் தவிர வேறொன்றும் இல்லை என்று நினைப்பவர்கள் மூன்று தவறுகளை செய்கிறார்கள்.

முதல் தவறு :

அரசு என்பது சமூகத்திலிருந்து முற்றிலும் வேறானது. தனிப்பட்டது என்று நம்புவது. உண்மையில் அரசு, சமூகத்திலிருந்து வேறானதும், தனிப்பட்டதும் அல்ல. அரசு என்பது சமூகத்தின் பல அமைப்புகளில் ஒன்று. சமூகத்தின் கூட்டு வாழ்க்கைக்குத் தேவையான கடமைகளில் சிலவற்றைச் செய்யுமாறு சமூகம் அரசுக்கு குறிப்பிட்டுக்கொடுக்கிறது.

இரண்டாவது தவறு :

ஓர் அரசு சமூகத்தின் இறுதி நோக்கங்களையும், குறிக்கோள்களையும் பிரதி பலிக்க வேண்டும் என்பதையும், அரசு வேரூன்றியிருக்கும் சமூகம் சனநாயக சமூகமாக இருந்தாலன்றி இது நடவாது என்பதையும் உணரத் தவறுவது. சமூகம் சனநாயக முறையில் இல்லையென்றால், ஓர் அரசு சனநாயக அரசாக ஒருபோதும் இருக்க முடியாது. சமூகம் இரண்டு வர்க்கங்களாக, ஆளுவோர் என்றும் ஆள்படுவோர் என்றும் பிரிக்கப் பட்டிருந்தால், அரசு ஆளும் வர்க்கத்தின் அரசாகத்தான் இருக்கும்.

மூன்றாவது தவறு :

அரசு நல்லதாக இருக்குமா, கெட்டதாக இருக்குமா, சனநாயகமாக இருக்குமா, அல்லது சனநாயகமற்றதாக இருக்குமா என்பது, சட்டத்தைச் செயல்படுத்துவதற்காக எல்லா அரசுகளும் சார்ந்திருக்கின்ற அமைப்புகளை, குறிப்பாக சிவில் சர்வீஸ் அமைப்பைப் பொறுத்தது என்பதை மறந்துவிடுவதாகும். சிவில் சர்வீஸ் பணியில் உள்ளவர்கள் எத்தகைய சமூகச் சூழலில் வளர்ந்தவர்கள் என்பதைப் பொறுத்தே இது அமையும். சமூகச் சூழல் சனநாயகமற்றதாக இருந்தால், அரசும் சனநாயக மற்றதாகவே இருக்கும்.

சனநாயக வடிவிலான அரசு நல்ல பலனைக் கொடுக்குமா என்பது, சமூகத்தில் உள்ள தனி நபர்களின் மனப் பான்மையைப் பொறுத்தது. சமூகத்தில் உள்ள தனி நபர்களின் மனப்பான்மை சனநாயகப் பண்புள்ளதாக இருந்தால், சனநாயக வடிவிலான அரசு நன்மையைத் தரும் என்று எதிர்பார்க்கலாம். இல்லையென்றால் சனநாயக வடிவிலான அரசு ஆபத்தான அரசான மாறிவிடக்கூடும்.

- 4 ஆம் பக்கம் பார்க்க....

**இருந்தது போதும் செருப்பாய் இனி எழுந்திரு தோழா நெருப்பாய்**

# பேரவையின் நிகழ்வுகள்




*தஞ்சை மாவட்டத்தில்*

## கல்வெட்டு மற்றும் கொடியேற்று விழா

12.02.2010 அன்று தஞ்சை மாவட்டம், வல்லம் நகரத்தில் ஆதித்தமிழர் பேரவையின் கல்வெட்டு மற்றும் கொடியேற்று விழா நடைபெற்றது. நீல செங்கொடியை தோழர் பேரவையின் நிறுவனர் அதியமான் அவர்கள் ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் தோழர் முருகு. அய்யனார் தொண்டரணி செயலாளர் வரவேற்புரை யாற்றினார். வழக்கறிஞர் தோழர் தஞ்சை இளமதி, வீரன். அரங்கராசு, மாவட்டத்தலைவர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இறுதியாக இரா. மாயன் மாவட்டச் செயலாளர் அவர்கள் நன்றியுரையாற்றினார். இதில் ஆதித்தமிழர் பேரவை பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

*ஈரோடு மாவட்டத்தில்*

## பேரவையின் அலுவலகம் திறப்பு விழா மற்றும் கொடியேற்று விழா

13.02.2010 சனிக்கிழமையன்று காலை 9.00 மணிக்கு பேரவையின் ஈரோடு மாவட்ட அலுவலகம், தோழர் பேரவையின் நிறுவனர் அதியமான் அவர்கள் அலுவலகம் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் இரா. தமிழ் இன்பன் மாவட்ட செயலாளர் தலைமை வகித்தார். ம. பாபு அவர்கள் வரவேற்புரையாற்றினார். தோழர்கள் இரா. வீரவேந்தன், ந. பழனிச்சாமி, ஒண்டிவீரன், மாணிக்கம், துரைசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்புரையாளராக தோழர்கள் ப. பெருமாவளவன் மாநில நிதிச் செயலாளர், சுப. இளங்கோவன் பொதுச் செயலாளர், தீபா, இராசராசன், வீரகோபால், வீரமுருகு ஆகியோர் கலந்து கொண்டனர். பிறகு மாலை சுமார் 3.00 மணி அளவில் ஈரோடு, பவானி, அந்தியூர் ஒன்றியங்களிலும், ஆதித்தமிழர்களின் பகுதிகளில் பெயர்பலகை மற்றும் கொடியேற்று விழா நடைபெற்றது. நீலச்செங்கொடியை நிறுவனர் தோழர் அதியமான் அவர்கள் ஏற்றிவைத்தார். பெயர் பலகையை பொதுச் செயலாளர் சுப. இளங்கோவன் திறந்து வைத்தார். கொடியேற்றிய இடங்கள் : 1. அன்னை தெரசா நகர், 2. மாயபுரம், 3. வாய்க்கால்மேடு, 4. கொண்டையாம்பாளையம், 5. சிலம்பகுட்டை, 6. குண்டுமூப்பனூர், 7. வீரனூர், 8. நகலூர் புதூர், 9. தவுட்டுப்பாளையம் ஆகிய இடங்களாகும்.

*திண்டுக்கல் மாவட்டம், பழனியில்*

## கிளை திறப்பு விழா மற்றும் கொடியேற்று விழா

14.02.2010 ஞாயிற்றுக் கிழமையன்று காலை 10.00 மணி அளவில் திண்டுக்கல் மாவட்டம், பழனி ஒன்றியத்தில் ஆதித்தமிழர் சேரிகளில் கிளை திறப்பு விழா மற்றும் கொடியேற்று விழா நடைபெற்றது. தோழர் பேரவையின் நிறுவனர் அதியமான் அவர்கள் நீல செங்கொடியை ஏற்றி வைத்தார். இந்நிகழ்வில் நாகராசன் மாவட்ட தலைவர் தலைமை வகித்தார். தோழர்கள் சித்தார்த்தன், பெருமாவளவன், சுக. சங்கர், வீரமுருகு, விடுதலை வீரன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர் மற்றும் ராசாராம், துணைத் தலைவர், சங்கர், முருகன் ஒட்டன் சத்திரம் ஒன்றியச் செயலாளர், சுப்பையா, முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியில் மாவட்ட செயலாளர் லட்சுமணன் அவர்கள் நன்றி கூறினார். கொடியேற்றி இடங்கள் : கல்துரை, குமாரபாளையம், கோட்டத் துறை பகுதிகளில் கொடியேற்றி வைக்கப்பட்டது.

*நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு ஒன்றியத்தில்*

## கிளை திறப்பு விழா மற்றும் பெயர்பலகை திறந்து வைத்து கொடியேற்று விழா

21.02.2010 ஞாயிற்றுக் கிழமை மாலை 2.00 மணியளவில் நாரமூப்பன் பள்ளம், நெய்க்காரன்பட்டி ஆகிய ஊர்களில் பேரவையின் கிளைத்திறப்பு விழா மற்றும்




பெயர் பலகை திறந்து வைத்து கொடியேற்று விழா நடைபெற்றது. தோழர் பேரவையின் நிறுவனர் அதியமான் அவர்கள் நீல செங்கொடியை ஏற்றி வைத்தார். இந்நிகழ்வில் ந. சரவணகுமார் மாவட்ட தலைவர் தலைமை வகித்தார். தோழர்கள் செ. ராமசந்திரன், வி. சோமசுந்தரம், க. பிரகாஷ், க. திருசங்கர், ரா. ராஜேந்திரன், த. புகழ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரவையின் நிறுவனத் தலைவர் இரா. அதியமான், சுப. இளங்கோவன், ப. பெருமாவளவன், க. ராசராசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். க. வேங்கை மார்பன், ந. நல்லமுத்து, சி. தமிழ்தேசியன், இரா. குப்புசாமி, ரா. செல்வவிள்ளாலன், த.

## இரங்கல் செய்தி

**14.03.2010 அன்று பேரவையின் மாநில மகளிர் அணித்தலைவி முத்துராக்கு அவர்களின் தந்தையார் உடல் நலக்குறைவின் காரணமாக இயற்கை எய்தினார் பேரவையின் நிறுவனர் நேரில் சென்று ஆறுதல் கூறி, இறுதிச் சடங்கில் கலந்து கொண்டார். இதில் மதுரை மாவட்டம் மற்றும் மற்ற மாவட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.**



## கருத்தரங்கம்

14.02.2010 ஞாயிற்றுக் கிழமையன்று மாலை 4.00 மணி அளவில் திண்டுக்கல் மாவட்டம், பழனி ஒன்றியம் ராசா மஹால் திருமண அரங்கில் பேரவையின் கருத்தரங்கம் மிகச் சிறப்புடன் நடைபெற்றது. கருத்தரங்க விவாதப் பொருளாக மத்திய அரசு கல்வி வேலைவாய்ப்பு மற்றும் பொதுத்துறையில் அருந்ததியர்களுக்கு உள்இட ஒதுக்கீடு வழங்கவும், பல சக்கிலியர் மடத்தை மீட்கவும், பஞ்சமி நிலத்தை மீட்கவும் போன்ற தலைப்பின் கீழ் சேரித்தமிழர் அதியமான் அவர்கள், மதுரை சித்தார்த்தன், ப. பெருமாவளவன், சுக. சங்கர், விடுதலை வீரன், கராத்தே வீரமுருகு ஆகியோர் மேற்கண்ட தலைப்பின் கீழ் சிறப்புரையாற்றினர். இதில் திண்டுக்கல் மாவட்ட பழனி ஒன்றிய ஆதித்தமிழர் தோழர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

*நாமக்கல் மாவட்டம், இராசிபுரத்தில்*

## பொதுக்கூட்டம்



21.02.2010 மாலை 5.00 மணி அளவில் நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் ஒன்றியம் மலையாம்பட்டி கிராமத்தில் சாதி ஒழிப்பு பிரகடன பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் க. வேங்கை மார்பன் மாவட்ட செயலாளர் தலைமை வகித்தார். தோழர் சி. கண்ணன் வரவேற்புரையாற்றினார். தோழர்கள் சி. மாரிமுத்து, ப. மனோகரன், அன்பழகன், இராசகோபால், குணசேகரன், அ. சுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரவையின் நிறுவனத் தலைவர் இரா. அதியமான் அவர்கள் நெருப்புரையாற்றினார். தோழர்கள் சுப. இளங்கோவன் பொதுச்செயலாளர், ப. பெருமாவளவன், க. இராசராசன், தமிழ்தேசியன், ந. நல்லமுத்து, இரா. குப்புசாமி மற்றும் மலையம்பட்டி கிராம அருந்ததிய சமுதாய சொந்தங்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கலந்தாய்வுக்கூட்டம்




28.02.2010 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணி அளவில் சென்னை, ஹோட்டல் பிக்னிக் தங்கும் விடுதியில் வடக்கு மண்டல கலந்தாய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தோழர். இல. தாசரி வசந்தன் வடக்கு மண்டல அமைப்பாளர் அவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் ஆர்.கே. செல்லையா, பி. சிதம்பரம், எம். ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தோழர் பெருங்குடி மோகன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். சிறப்பு அழைப்பாளராக பேரவையின் நிறுவனர் இரா. அதியமான் அவர்கள் கலந்து கொண்டு எழுச்சியுரையாற்றினார். மேலும் தோழர்கள் சுப. இளங்கோவன், பெருமாவளவன், சித்தார்த்தன், சு.க. சங்கர், முத்துராக்கு, வீரமுருகு மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியில் எம். வரதன் அவர்கள் நன்றியுரை கூறினார்.

## நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு ஒன்றியத்தில்
# கிளை திறப்பு விழா மற்றும் பெயர்பலகை திறந்து வைத்து கொடியேற்று விழா

21.02.2010 ஞாயிற்றுக் கிழமை மாலை 2.00 மணியளவில் நாரமூப்பன் பள்ளம், நெய்க்காரன்பட்டி ஆகிய ஊர்களில் பேரவையின் கிளைத்திறப்பு விழா மற்றும் பெயர் பலகை திறந்து வைத்து கொடியேற்று விழா நடைபெற்றது. தோழர் பேரவையின் நிறுவனர் அதியமான் அவர்கள் நீல செங்கொடியை ஏற்றி வைத்தார். இந்நிகழ்வில் ந. சரவணகுமார் மாவட்ட தலைவர் தலைமை வகித்தார். தோழர்கள் செ. ராமசந்திரன், வி. சோமசுந்தரம், க. பிரகாஷ், சு. திருசங்கர், ரா. ராஜேந்திரன், த. புகழ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரவையின் நிறுவனத் தலைவர் இரா. அதியமான், சு.ப. இளங்கோவன், ப. பெருமாவளவன், க. ராசராசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். க. வேங்கை மார்பன், ந. நல்லமுத்து, சி. தமிழ்தேசியன், இரா. குப்புசாமி, ரா. செல்வவிள்ளாலன், த. மதிக்குமரன், சி. வேலுமணி மற்றும் பலர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். இறுதியில் ப. சண்முகம் திருச்செங்கோடு ஒன்றியத் தலைவர் அவர்கள் நன்றி கூறினார்.

தவறாமல் படியுங்கள்
ஆதித் தமிழன்

## கோவை மாவட்டத்தில்
# செயல் வீரர்கள் கூட்டம்

03.03.2010 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் வட கோவை அம்பேத்கர் அறிவகத்தில் கோவை மாவட்ட மாநகர செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் தி.செ. கோபால் தலைமை தாங்கினார். செ.பா.வானுகன், கரு. மாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

துணை பொது செயலாளர் தீபா, கலை இலக்கிய அணித்தலைவர் களப்பிரர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இரா. வீராசாமி நன்றி கூறினார்.

அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14ஆம் தேதி ஈரோட்டில் நடைபெற உள்ள செருப்பு தைப்போர் மறுவாழ்வு மாநாட்டிற்கு கோவை மாவட்டத்தில் இருந்து 500 பேர் கலந்து கொள்வது. கோவை மாவட்டத்தில் ஒன்றியங்கள் வாரியாக பேரவை பெயர் பலகைகளை திறந்து கிளைகள் அமைத்தல், கருத்தரங்கம் நடத்துவது. கோவை மருத்துவக்கல்லூரி, அரசு மருத்துவமனையில் ஸ்கேன் கருவிகள், நாய்கடி மருந்து மற்றும் உயர் காக்கும் முக்கிய மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டிருந்தால் அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன பல்வேறு தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.




# வாழ்க்கை இணை நல ஒப்பந்த விழா

பிப்ரவரி 12.

12.02.2010 காலை 9.00 மணியளவில் மாஸ் விழா அரங்கில் தஞ்சை வழக்கறிஞர் இளமதி இல்ல வாழ்க்கை இணை நல ஒப்பந்த விழா நடைபெற்றது.

இவ்விழாவில் நிறுவனர் இரா. அதியமான், இணையர் சி. எழிலரசி, வி. விவேகானந்தன் ஆகியோரை வாழ்த்தி சிறப்புரையாற்றினார். இதில் தோழர்கள் தஞ்சை இளமதி, மாயன், விடுதலை வீரன், நீலவேந்தன், தமிழ்வேந்தன், சு.க. சங்கர், முத்துராக்கு, இராணி, மணியரசன், பழ. இராசேந்திரன், பெ. இராமச்சந்திரன், நா. வைகறை மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

## இராசிபுரத்தில்
# மாநில நிர்வாகிகள் கூட்டம்

கடந்த 20.02.2010 அன்று மாலை 3 மணியளவில் நாமக்கள் மாவட்டம், இராசிபுரம், கல்யாண் அரங்க கூட்டத்தில் மாநில நிர்வாகள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு நிறுவனர் இரா. அதியமான் அவர்கள் தலைமை தாங்கினார். பொதுசெயலாளர் சுப. இளங்கோவன் மற்றும் அமைப்புச் செயலாளர் சித்தார்த்தன் முன்னிலை வகித்தனர்.

எதிர்வரும் ஏப்ரல் 14இல் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளில் ஆதித் தமிழர் பேரவை நடத்தும் செருப்பு தைப்போர் மறுவாழ்வு மாநாடு வெகு சிறப்பாக நடத்துவதைப் பற்றியும் பேரவையின் நிர்வாக சிரமைப்புகுறித்தும், அருந்ததியர் இட ஒதுக்கீட்டிற்கு எதிராக பேசிய தலித் ஒற்றுமையை சீர்குலைக்கும் தாழ்த்தப் பட்டோர் தேசிய ஆணையத்தின் துணைத் தலைவர் காம்ப்ளேவின் நடவடிக்கை குறித்தும் விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


1. புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14இல் ஈரோட்டில் நடைபெறும் செருப்பு தைப்போர் மறுவாழ்வு மாநாடு வெற்றிகரமாக அமைந்திரும் வகையில், கீழ்கண்ட மாநில நிர்வாகிகளை மாநாட்டு மேலிட பார்வையாளராக நியமனம் செய்யப்படுகிறார்கள்.

1. கோவை , நிறுவனர் மற்றும் தோழர் களப்பிரர்.
2. திருப்பூர், தோழர் நீலவேந்தன்.
3. ஈரோடு, திண்டுக்கல் தோழர்கள், ப. பெருமாவளவன், வீரகோபால்.
4. கரூர், தோழர் வீரமுருகு.
5. சேலம், நாமக்கல், சு.ப. இளங்கோவன்.
6. திருச்சி, தோழர்கள் அருந்ததி மைந்தன், வசந்தி.
7. தருமபுரி, தோழர் இராசராசன்.
8. கிருஷ்ணகிரி, எழில்புத்தன்.
9. மதுரை, தேனி, தோழர் சித்தார்த்தன்.
10. இராமநாதபுரம், சிவகங்கை, தோழர் விடுதலை வீரன்.
11. தூத்துக்குடி, நெல்லை, தோழர் சு.க. சங்கர்.
12. தஞ்சை, தோழர் இராணி.
13. விருதுநகர், தோழர் தமிழ்வீரன்.
14. விழுப்புரம், கடலூர், சென்னை, காஞ்சி, திருவள்ளுவர், திருவண்ணாமலை தோழர்கள் வசந்தன், மணியரசு, முகிலன்.

2. செருப்பு தைப்போர் மறுவாழ்வு மாநாட்டின், சுவர் விளம்பரங்கள் மாவட்டத்திற்கு 25 இடங்களிலும், 5000 துண்டறிக்கைகளும், 200 சுவரொட்டிகளும், தென், வட, மத்திய மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு தலா, 10000 மாநாட்டு நிதியாகவும், ஒன்றியத்திற்கு தலா 2 வேன் அல்லது 1 பேருந்து என ஏற்பாடு செய்து மக்களை திரட்டுவது, கிளை இல்லாத பகுதிகளில் கிளை அமைப்பது எனவும், அதே போல் மேற்கு மண்டல மாவட்டங்களில் தலா 50 இடங்களில் சுவர் விளம்பரங்கலும், மாவட்டத்திற்கு 5000 துண்டறிக்கைகளும், மாவட்டத்தில் ஒன்றியத்திற்கு 4 வேன் (அ) இரண்டு பேருந்துகளும், மாநாட்டு நிதியாக தலா ரூ.10000 மும் வழங்கிட மாநில நிர்வாகிகள் குழு வலியுறுத்துகிறது.

3. ஆதித்தமிழர் பேரவையின் இணையதளப் பொறுப்பாளர் மற்றும் வெளிநாட்டு தொடர்பானர் ஆக, தோழர் தேன்மொழி மார்ட்டின் அவர்களை நியமனம் செய்ய மாநில நிர்வாகக்குழு ஒப்புதல் அளிக்கிறது.

4. அருந்ததியர் இட ஒதுக்கீட்டிற்கு எதிராகப் பேசி, தலித் ஒற்றுமையை சீர்குலைக்கும் ''காம்ப்ளே'' வை கண்டித்து மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதென மாநில நிர்வாகிகள் கூட்டம் ஏக மனதாய் தீர்மாணிக்கிறது.




வடக்கு மண்டல செயலாளராக தோழர். சென்னை தாசரி வசந்தன் அவர்களை நியமனம் செய்தபோது எடுத்தபடம்.

# ஆதித்தமிழர் பேரவை தலைமை அறிவிப்பு

## புது தில்லி மாநில நிர்வாகிகள்

1. தோழர். சாமி, புது தில்லி மாநில தலைவர்.
2. தோழர். எஸ். தங்கராசு, துணைத் தலைவர்.
3. தோழர். இ.கே. வேலு, பொதுச் செயலாளர்.
4. தோழர். கே.பி. வேலு, துணை பொதுச் செயலாளர்.
5. தோழர். சி. ஏ. சூரியராசு, பொதுச் செயலாளர்.
6. தோழர். கே.பி. செந்தில், மாநில நிதிச்செயலாளர்.
7. தோழர். இ. முத்து, இணை நிதிச் செயலாளர்.
8. தோழர். பி. சிவா, அமைப்பாளர்.

ஆகியோரை பேரவையின் நிறுவனர் இரா. அதியமான் நியமித்துள்ளார்.

இதுவரை தலைமை நிலையச் செயலாளராக பொறுப்பு வகித்த தோழர். தீபா அவர்கள் அப்பொறுப்பிலிருந்து மாற்றி, துணை பொதுச் செயலாளராக தொடர்ந்து பணி செய்வார்.

# பேரவையின் ஆர்ப்பாட்டங்கள்

*தூத்துக்குடி மாவட்டத்தில்*

## பேரவையினரின் மீது நடத்திய தாக்குதலை கண்டித்து சாலை மறியல்




சனவரி 21.

திட்டங்குளம் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலர் திரு. மா. கோவிந்தராசன் சொந்த ஊரிலே, அய்யா அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

மேற்கண்ட ஊரிலே அய்யா அவர்கள் கிராம மக்களிடம் உரையாற்றி விட்டு அடுத்ததாக, நகர செயலர் எம்.சங்கர் இருப்பிடமான சுப்பிரமணியாபுரத்திற்கு நீலச் செங்கொடி ஏற்றுவதற்கு அய்யா அவர்கள் வாகனமும், பின்பு 5 வாகனம் சென்றது. அது இடையூறாக இருப்பதால் மற்ற 25 சுமோ வாகனங்களும் எட்டையபுரம் ரோட்டில் சண்முகா தியேட்டர் அருகில் நிறுத்தப்பட்டது. இரவு 8.00 மணி சேரி எண் 10, சுப்பிரமணயாபுரம் அய்யா அவர்கள் நீலச்செங்கொடி ஏற்றிவிட்டு வரும்போது அங்கே உள்ள பள்ளர் இனத்தை சார்ந்தவர்கள் மறைந்திருந்து கல்லால் வாகனத்தின் மீது எறிந்தனர் மற்றும் ஹாக்கி மட்டை போன்ற பொருட்களால் நம் மீது தாக்குதல் நடத்தினர் பின்பு நம் தோழர்கள் ஆயுதம் ஏதும் இல்லாமல் பதிலுக்கு சரமாரியாக அவர்களை தாக்கினர்.

அங்கு நடந்த சம்பவம் ஏதும் அதன் அருகில் எட்டையபுரம் சாலை தியேட்டர் சண்முகா அருகில் உள்ள 25 சுமோவில் உள்ள தோழர்களுக்கு அங்கு நடந்த சம்பவம் தெரியாது. ஆனால் அத்தனை வாகனங்கள் மொத்தம் 30 சுமோ. உள்ளே போயிருந்தால் அந்த தாக்குதலுக்கு அங்கு இருக்கும் பள்ளர்களின் வீடுகளை அடித்து நொறுக்கி இருப்பார்கள் அதில் எந்த சந்தேகமும் இல்லை.

பின்பு அனைவரும் பொதுக்கூட்டம் மேடைக்கு போன பின்பு காயமடைந்த தோழர் வடக்கு மாவட்ட செயலரிடம் கூற, அதன் பின் நம்மை தாக்கிய பள்ளர்களை உடனடியாக கைது செய்யச் சொல்லி காவல்துறையை கண்டித்து, வடக்கு மாவட்டச் செயலாளர் மா. கோவிந்தராசன் தலைமையில், எட்டையாபுரம் சாலையில் எந்த வாகனமும் மாற்று வழியில் செல்ல முடியாத அளவில் சரியான மும்முனை சாலையில் சுமார் 250 தோழர்கள் இரவு 8.30 மணிக்கு சாலை மறியலில் ஈடுபட்டு காவல்துறையை எதிர்த்து கோசங்கள் போட்டு பின்பு காவல்துறை துணை கண்காணிப்பாளர் டி.எஸ்.பி. வந்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

எங்கள் தோழர்களை தாக்கிய பள்ளர்களை கைது செய்யும் வரை நாங்கள் சாலை மறியலைக் கைவிட மாட்டோம் என்று மாவட்ட செயலாளர் வடக்கு மா. கோவிந்தராசன் மற்றும் மாநில துணைப் பொதுச் செயலாளர் சங்கர், தெற்கு மாவட்டச் செயலாளர் ரா.வே. மனோகர் போராட்டத்தை தீவிரப்படுத்து அன்று இரவு சாலை மறியலில் இருந்து 5கி.மீ. தூரத்திற்கு வாகனங்கள் ஸ்தம்பித்து நின்றது. பின்பு டிஎஸ்.பி. அந்த கயவர்கள் 10 பேர் மீது வழக்கு பதிவு செய்து எஃப்.ஐ.ஆர். காப்பி கொடுத்த பின்பு சாலை மறியல் கைவிடப்பட்டது. இந்த சாலை மறியல் சுமார் 1.30 (ஒன்றரை மணி) மணி நேரம் நடந்தது. பின்பு சாலை மறியல் ஈடுபட்டதற்கு வடக்கு மாவட்டச் செயலாளர் மா. கோவிந்தராசன் அவர்கள் மற்றும் 70 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பின் நகரச் செயலாளர் எம். சங்கர் மட்டும் 4 பேர் கொண்ட கும்பல் பள்ளர்களை தாக்கியதாக காவல்துறை நம் தோழர்கள் மீது 2 வழக்குகள் பதிவு செய்துள்ளது.

இரவு சரியாக 10 மணிக்கு அய்யா அவர்கள் பொதுக்கூட்ட மேடைக்கு வந்தார்கள் பின்பு அய்யா அவர்கள் 11 மணிமுதல் 1 மணி வரை நெருப்புரை ஆற்றினார்.

அய்யா அவர்கள் ஆற்றிய உரையில்...
இழிவு தொழில் செய்யாதே!
மலம் அல்லாதே !
சாவு சொல்ல போகாதே !
பிணத்திற்கு குழி வெட்டாதே
மற்றும் வன்கொடுமை சட்டத்தினால் அருந்ததியர்களுக்கு கிடைக்கும் நீதியையும் மற்றும் பலன்கள் பற்றியும் மிக நீண்ட உரையாற்றினார். மாநில இளைஞரணிச் செயலாளர் பழ. நீலவேந்தன் வழக்கறிஞர் அவர்கள் வீர உரை இளைஞர்களை மற்றும் நம் தோழர்கள் குருதியை பொங்கி எழவைத்தது பொதுக்கூட்டம் சிறப்பாக முடிந்தது.

அந்த 22.01.10 அன்று முதல் நீலச்செங்கொடி என்றால் என்ன? யார் அவர்கள், நீலச்சட்டை தோழர்கள் யார் அவர்கள், சாலை மறியலில் மிக ஆக்ரோசத்தை வெளிப்படுத்து கிறார்கள் என்று கோவில்பட்டி நகரம் முழுவதும் ஒரே நாளில் அனைவரிடமும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.

இன்று நீலச்சட்டையைக் கண்டால் அவர்கள் அருந்ததியர்கள் நீலச்செங்கொடி ஆதித்தமிழர்களான அருந்ததியர்களின் கொடி என்று கோவில்பட்டி முழுவதும் தெளிவாக தெரிந்துவிட்டது.

அந்த சாலை மறியலுக்கும் பள்ளர்களின் அந்த சிறிய தாக்குதலுக்கும் முழுகாரணம் கோவில்பட்டி காவல்துறைதான் முழுவதும் பொறுப்பு சரியாக நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு 15 நாட்களுக்கு முன்னதாக காவல்துறையினரிடம் அனுமதிபெற்று, பாதுகாப்பு கேட்ட பின்பும் நிகழ்ச்சிக்கு அனுமதி அளித்த அவர்கள், சக்கிலியர்களுக்கு என்ன பாதுகாப்பு என்று அவர்கள் ஏளனமாக நினைத்து விட்டனர் அதனால் தான் அன்று அந்த பிரச்சனை நடந்தது.

நம்மை தாக்கிய அந்த கயவர்கள் மீது கைது செய்யச் சொல்லி நாம் சாலை மறியலில் ஈடுபட்டு சரியாக ஒன்றரை மணி நேரத்தில் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்து நாம் வெற்றி பெற்றோம்.

தவறாமல் படியுங்கள்
ஆதித் தமிழன்



## உள் இட ஒதுக்கீடு குறித்து தவறாக பேசிய காம்ளேவை கண்டித்து

# உருவ பொம்மை எரிப்பு

பிப்ரவரி 22.

அருந்ததியர்களின் கல்வி, வேலைவாய்ப்பில் உள் இட ஒதுக்கீடு தமிழக அரசு வழங்கியது அரசியல் சட்டத்திற்கு எதிரானது என பேசிய எஸ்சி/எஸ்டி தேசிய ஆணைய துணைத்தலைவர் காம்ப்ளேயை கண்டித்து மாநிலம் தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம் இன்று 22.02.2010 அன்று நடைபெறுகிறது.

கோவை மாவட்டத்தில் மாவட்ட செயலாளர் கரு. மாணிக்கம் தலைமையில், ஆவல்மாரிமுத்து, சுங்கம் சிவா, நா. ராசசேகர், சுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலையிலும் மாவட்டத் தலைவர் இ.செ.கோபால், சி. களப்பிரர் மாநில கலை இலக்கிய அணி தலைவர் கண்டன உரையும், தீபா துணை பொது செயலாளர், இரா. வீராசாமி மாவட்ட துணை செயலர் செந்தமிழன் ஒன்றிய தலைவர், கனகராசு ஒன்றிய செயலர் மற்றும் திரளானோர் பங்கேற்றனர்.

மேற்கண்ட கோரிக்கையை வலியுறுத்தி கரூர், திருச்சி, ஈரோடு, நாமக்கல், சேலம், தூத்துக்குடி, மதுரை, திண்டுக்கல், நெல்லை, ஆகிய மாவட்டங்களிலும் உருவபொம்மை எரித்து, பேரவையின் தோழர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

# மாவீரன் ஒண்டிவீரன் பகடைக்கு மணிமண்டபம் அமைக்க வேண்டும்

### தமிழக அரசுக்கு நிறுவனர் அதியமான் கோரிக்கை



கோவில்பட்டி
சன.22

அருந்ததியர் சமூகத்தின் முதல் இந்திய சுதந்திர போராட்டத் தலைவர் ஒண்டி வீரன் பகடைக்கு மணி மண்டபம் மற்றும் முழு உருவ வெண்கலச் சிலையை தமிழக அரசு அமைக்க வேண்டும் என நிறுவனர் இரா. அதியமான் கேட்டுக்கொண்டுள்ளார்.

அருந்ததியர் மக்களுக்கு 3% உள் இட ஒதுக்கீடு வழங்கிய தமிழக முதல்வருக்கு நன்றி.

அதே போல மத்திய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு, பொதுத்துறை நிறுவனங்களிலும் அருந்ததியர் மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கிட தமிழக அரசு சிபாரிசு செய்ய வேண்டும். தமிழக அரசு வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும். வன்கொடுமை புகார் தருபவர் மீதே வழக்குப் பதிவு செய்வதை நிறுத்த காவல்துறைக்கு அறிவுறுத்த வேண்டும்.

அனைத்து சமுதாய சுதந்திரப் போராட்டத் தலைவர்களுக்கும் மணி மண்டபம் மற்றும் உருவச் சிலை அமைத்துக் கொடுத்தது போல், அருந்ததியர் சமூகத்தின் முதல் இந்திய சுதந்திர போராட்டத்தலைவர் நெற்கட்டான செவல் பாளையத் தலைவர் மாவீரர் ஒண்டி வீரன் பகடைக்கும் மணி மண்டபம் மற்றும் முழு உருவ வெண்கலச் சிலை அமைத்துத் தர வேண்டும்.

கேரள அரசு போல தமிழக அரசும் துப்புரவுப் பணியாளர்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர வேண்டும்.

ஒவ்வொரு ஐந்தாண்டு திட்டத்திலும் தலித் மக்களுக்கென மத்திய அரசு ஒதுக்கும் சிறப்பு உட்கூறு திட்ட நிதியை, இம்மக்களின் கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதாரம் உள்ளிட்ட வாழ்க்கை மேம்பாட்டிற்கு முழுமையாக செலவிட வேண்டும் என்றார்.

# வன்கொடுமை சட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என ஆதித்தமிழர் பேரவை வலியுறுத்தல்.

கோவில்பட்டி சன24.

கோவில்பட்டியில் ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அளித்த பேட்டியில் மத்திய அரசின் வேலைவாய்ப்பில் பொதுத்துறை நிறுவனங்களில் அருந்ததியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கவும், வன்கொடுமை தடுப்பு சட்டத்தை தீவிரமாக நடைமுறை படுத்தவும் முழு மது விலக்கை அமல்படுத்தவும் வலியுறுத்தி பேசினார்.

கோவில்பட்டி பகுதியில் பொது கூட்டத்தில் கலந்து கொண்டு கொடியேற்றி வைக்க வந்த ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அவர் கூறியதாவது.

அருந்ததியர் மக்களுக்கு 3% இட ஒதுக்கீடு அளித்த தமிழக முதல்வருக்கு நன்றி. தமிழக அரசு வழங்கியது போல் மத்திய அரசின் கல்வி வேலை வாய்ப்பிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் அருந்ததிய மக்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கவும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை தீவிரபடுத்தவும், வன்கொடுமை புகார் கொடுப்பவர் மீதே பொய் வழக்கு பதிவு செய்வதை தடுக்க வேண்டுமெனவும், தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் அறிவிக்கப்படும் பின்னடைவு பணியிடங்கள் போன்று, அருந்ததியர் இட ஒதுக்கீட்டிலும் நடைமுறை படுத்த வேண்டும் என்றும், முதல் இந்திய சுதந்திர போராட்ட நெற்கட்டான் செவல்பாளையத் தலைவர் ஒண்டிவீரனுக்கு மணி மண்டபமும், முழு உருவ வெண்கல சிலையும் திருநெல்வேலியில் அமைக்க வேண்டுமெனவும், இலவச வீட்டுமனை பட்டா மற்றும் மாநகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சியில் பணி புரியும் துப்புரவு பணியாளர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டி கொடுக்க வேண்டுமென்றும், தனி தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்படும் பஞ்., தலைவர்கள் சுதந்திரமாக செயல்பட துணைத் தலைவர்களும் தலித் மக்களாகவே இருக்க வேண்டும் என்ற சட்ட திருத்தம் கொண்டு வரவேண்டும் என்றும், தமிழகத்தில் முழு மதுவிலக்கு அமல் படுத்தப்பட வேண்டும். மேலும் கள் இறக்குவதை முற்றிலுமாக எதிர்க்கிறோம். இவ்வாறு ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் கூறினார். பேட்டியின் போது வடக்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராசன், வழக்கறிஞர் அணி விஜயகுமார் மற்றும் மாநில இளைஞரணி தலைவர் சங்கர் ஆகியோர் உடன் இருந்தனர்.

## புரட்சியாளர் பேசுகிறார்...



'' சாதி என்ற கண்ணோட்டத்தை இந்துக்களின் மனதில் ஆழமாகப் பதிய வைத்திருக்கிற இந்து மதமே தவறானது என்று கருதுகிறேன். நீங்கள் வீழ்த்த வேண்டிய எதிரி சாதியைக் கடைபிடிக்கும் மக்களல்ல சாதிகளின் மதமான இந்து மதத்தை மக்களுக்குக் கற்றுத் தந்திருக்கிற சாத்திரங்களே, உங்களின் பயங்கர எதிரி. சமபந்தி விருந்தில் கலந்து கொள்ளாதவர்களையும் கலப்பு மணம் செய்யாதவர்களையும் விமர்சிப்பதும் கேலி செய்வதும் அல்லது எப்போதாவது சில சமங்களில் சமபந்தி விருந்தை நடத்துவதும் கலப்பு மணவிழாவைக் கொண்டாடுவதும் வீண் வேலையாகும். கலப்பு மணவிழாவைக் கொண்டாடுவதும் வீண் வேலையாகும். சாத்திரங்கள் புனிதமானவை என்ற நம்பிக்கை அழித்தொழிப்பதுதான் சாதியை ஒழிக்கும் உண்மையான வழிமுறை. மக்களுடைய கருத்துகளும் நம்பிக்கைகளும் இப்படித்தான் இருந்தாக வேண்டும் என்று வடிவமைக்கும் வேலையைச் சாத்திரங்கள் இடைவிடாமற் செய்து வருகின்றன. இதை இனியும் நீங்கள் அனுமதித்துக்கொண்டிருந்தால் சாதியை ஒழிப்பதில் நீங்கள் எவ்விதம் வெற்றிபெற முடியும்?"

( அம்பேத்கரின் இந்தக் கேள்வி ஈழத்து இடது சாரிகளின் காதுகளிலும் சீர்த்திருத்தவாதிகளின் காதுகளிலும் அறிவுத்துறையினரின் காதுகளிலும் இன்னமும் தான் உறைக்கவில்லை.)

திருச்சியில்

# ஆதித் தமிழச்சிகளின் எழுச்சி மாநாடு




தோழர்கள், முத்துராக்கு, தீபா, இராணி மற்றும் வசந்தி அவர்கள் ஆகியோர் உள்ளனர்.

மார்ச் 8.

உலக மகளிர் தின நாளில் ஆதித் தமிழச்சிகளின் எழுச்சி மாநாடு நடைபெற்றது. இந்நிகழ்வில் தோழர் தி. வசந்தி மாநில மகளிர் அணி செயலாளர் தலைமை வகித்தார். முன்னிலை ராமாயி அம்மாள், பகவதி அம்மாள், வெண்ணிலா, பிரபாவதி, சந்தான லெட்சுமி, பார்வதி கமலா, செல்வி. சரசுவதி, ராசாத்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தோழர் வெண்ணிலா மாவட்ட மகளிரணி தலைவி அவர்கள் வரவேற்புரை யாற்றினார். தோழர்கள் ஆ. ராணி, மாநில துணை பொதுச் செயலாளர், முத்துராக்கு மாநில மகளிர் அணித் தலைவி, தீபா மாநில துணைப் பொதுச் செயலாளர் ஆகியோர் கருத்துரை வழங்கினர். சிறப்பு அழைப்பாளராக தோழர் சுப. இளங்கோவன் மாநில பொதுச் செயலாளர், ப. பெருமாவளவன் மாநில நிதிச் செயலாளர், தோழர் எழில்புத்தன் மாநில தொழிற்சங்கத் தலைவன், தோழர் சித்தார்த்தன் மாநில அமைப்புச் செயலாளர், அருந்ததி மைந்தன் இரயில்வே தொழிற்சங்கத் தலைவர், தோழர் அருந்ததி அரசு மாவட்ட செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினர்.

நிறைவுப் பேருரையாக அருந்ததியரின் வாழ்வுரிமைப் போராளி தோழர் இரா. அதியமான் நிறுவனத் தலைவர் அவர்கள் நிறைவு சொற்பொழிவாற்றினர். கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1998இல் மற்றும் விதிகள் 1995 தீவிரமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

2. தாழ்த்தப்பட்ட பெண்களின் மேல் படிப்பு செலவுகளை அரசு ஏற்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. தாழ்த்தப்பட்ட குழந்தைகளின் படிப்பு இடையிலே நிறுத்தக் காரணம் என்ன என்பதை அரசு கண்டறிய வேண்டும்.

4. வேலைவாய்ப்பிலும், அரசுத் துறைகளிலும் தாழ்த்தப்பட்ட பெண்களின் நிலைபாடு என்ன என்பதை அரசு ஆராய வேண்டும்.

5. எதிர்கால சமுதாயத்தின் மாற்றங்களால் தாழ்த்தப்பட்ட பெண்களின் நிலை என்பதையும் கண்டறிய வேண்டும்.

5. கள்ளச் சாராயம் மற்றும் கந்துவட்டிக் கொடுமையில் பெண்கள் படும் துயரம் மற்றும் பறிபோகும் வாழ்க்கை பற்றி ஓர் அலசல்.

6. தாழ்த்தப்பட்ட பெண்களின் அரசியல் நிலை மற்றும் பொருளாதார நிலை என்ன என்பதையும், மலத்தை அள்ளி சுமக்கும் ஆதித் தமிழச்சிகளுக்கு அலுவலக உதவியாளராக மாற்று பணி வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



எழுச்சி மாநாட்டில் கலந்து கொண்ட ஆதித் தமிழச்சிகளின் ஒரு பகுதி

1ஆம் பக்க தொடர்ச்சி....

ஒரு சமூகத்தில் உள்ள தனி நபர்கள் தனித்தனி வகுப்புகளாகப் பிரிக்கப் பட்டிருந்தால், ஒவ்வொரு வகுப்பும் மற்ற வகுப்பிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்தால், ஒவ்வொரு தனி நபரும் தன்னுடைய விசுவாசம் வேறெதையும் விட, முதன்மையாகத் தன் வகுப்புக்கே அளிக்கப்பட வேண்டும் என்று நினைத்தால், தனிமைப்பட்ட தன் வகுப்பில் வாழ்ந்து கொண்டு, வகுப்பு உணர்வு பெற்று, தன்னுடைய வகுப்பின் நலனை மற்ற வகுப்பின் நலனுக்கு மேலாகக் கருதினால், தன்னுடைய வகுப்பின் நலனை முன்னேற்றுவதற்காக சட்டத்தையும், நீதியையும் வக்கிரமாகப் பயன்படுத்துவதற்குத் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தினால், இந்த நோக்கத்துக்காகத் தன்னுடைய வகுப்பைச் சாராத மற்றவர்களுக்கு எதிராக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் எப்போதும் பாரபட்சத்துடன் செயல் பட்டால், ஒரு சனநாயக அரசு என்ன செய்ய முடியும்? வகுப்புகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டு, சமூக விரோத உணர்வும், ஆதிக்க மனப்பான்மையும் அதிகமாக இருந்தால் அரசு நீதியுடனும் நியாயத்துடனும் ஆட்சி செய்யும் கடமையை நிறுவேற்றுவது கடினம்.

இப்படிப்பட்ட சமூகத்தில், அரசு தன் வடிவத்தில் மக்களால் நடத்தப்படும் மக்களுடைய அரசாக இருந்தாலும், ஒருபோதும் மக்களுக்கான அரசாக இருக்க முடியாது. அது ஒரு வகுப்பால், ஒரு வகுப்புக்காக நடத்தப்படும் அரசாகவே இருக்கும். ஒவ்வொரு தனி நபரின் மனப்பான்மையும் சனநாயக ரீதியில் இருந்தால்தான், அதாவது ஒவ்வொருவரும் மற்றவர்களில் ஒவ்வொரு வரையும் தனக்குச் சமமாக நடத்தி, தான் உரிமை கொண்டாடும் அதே சுதந்திரத்தை மற்றவர்களுக்கும் கொடுக்கத் தயாராக இருந்தால் தான் மக்களுக்காக நடைபெறும் அரசாக இருக்க முடியும்.

இந்த சனநாயக மனப்பான்மை, தனி நபர்கள் சமூகத்தில் கலந்து பழகுவதன் விளைவாக உருவாவது. எனவே சனநாயக அரசு வேண்டுமென்றால், முதலில் சனநாயக சமூகம் வேண்டும். சனநாயக அரசுகள் வீழ்ச்சியடைந்துள்ளன என்றால் அதற்கு முக்கிய காரணம், அந்த அரசுகள் அமைந்திருந்த சமூகங்கள் சனநாயக சமூகங்களாக இல்லை என்பதேயாகும். நல்ல அரசின் பணி எந்த அளவுக்கு அதன் குடிமக்களின் மனப்பான்மையையும், அறநெறிப்பண்பையும் பொறுத்துள்ளது என்பது உணரப்படாதது வருந்தத்தக்கது. சனநாயகம் ஓர் அரசியல் எந்திரம் மட்டும் அல்ல; அது ஒரு மனப்பான்மை அல்லது வாழ்க்கைத் தத்துவம் ஆகும்.

ஒவ்வொரு தனி நபரின் மனப்பான்மையும் சனநாயக ரீதியில் இருந்தால்தான், அதாவது ஒவ்வொருவரும் மற்றவர்களில் ஒவ்வொரு வரையும் தனக்குச் சமமாக நடத்தி, தான் உரிமை கொண்டாடும் அதே சுதந்திரத்தை மற்றவர்களுக்கும் கொடுக்கத் தயாராக இருந்தால்தான் மக்களுக்காக நடைபெறும் அரசாக அது இருக்க முடியும். இந்த சனநாயக மனப்பான்மை, தனி நபர் சனநாயக சமூகத்தில் கலந்து பழகுவதன் விளைவாக உருவாவது. எனவே சனநாயக அரசு வேண்டுமென்றால், முதலில் சனநாயக சமூகம் வேண்டும்.

( பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு 4; பக்கம் : 282.)



மகளிர் அணி தலைவி முத்துராக்குவின் தந்தையார் உடலுக்கு அஞ்சலி செலுத்தும்போது எடுத்தபடம்.

**பெண்ணடிமை ஒழிப்போம் !**

**பெண் குழந்தைகளுக்கு கல்வி கொடுப்போம் !!**

## அருந்ததியர்களுக்கான

# ஆதித் தமிழர் பேரவையின் போராட்டங்கள்

பெரியார் பிறந்த மண்ணில், புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளில் இழிவை ஒழிக்க இன்னும் ஓர் போர் என்கிற முழக்கங்களோடு, ஆதித் தமிழர் பேரவை நடத்தும் செருப்பு தைப்போர் மறுவாழ்வு மாநாடு இந்து வருண சாதிக்கு மரணக்குழி தோண்டும் மற்றும் ஓர் மாநாடு இது.

வர்ண சாதியில் கடைசி பணியாக இருக்கும் இந்த பணி மனித சமூகத்தின் முதலில் ஒழித்துக் கட்ட வேண்டிய முதல் இழிவுப் பணி.

மனித சமுதாயத்தை தலைகுனிய வைக்கும் கையால் மலம் அள்ளுவது, செருப்பு தைப்பது, மலக்குழியில் மனிதனை இறக்குவது போன்ற இழிவுத் தொழிலை ஒழித்து அந்த தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு கொடுப்பது இந்து வர்ண சாதி ஒழிப்பு பெண்ணடிமை ஒழிப்பு, வர்க்க சிந்தனை ஒழிப்பு என தனது பணிகளால் பல்வாறாக தடைகள் எதிரில் நின்றாலும், அவைகளை உடைத்து ஆதித் தமிழர் பேரவை தனது பணிகளில் உன்னத லட்சியத்தோடு அருந்ததியர்கள் விடுதலையே, அனைவருக்கும் விடுதலை என்று எழுச்சி முழக்கங்களோடு, தமிழகம் முழுவதும் அருந்ததியர் மக்களை அமைப்பாக்கி வருகிறது.




10 ஆண்டுகளுக்கு முன் நாம் யார் என்று நமக்குத் தெரியாது. நம் அடையாளம் தெரியாது. இருப்பினும் பொது நோக்கங்களோடு நமது பணிகள் தொடர்ந்தன. குறிப்பான பணிகள் எங்கு இருந்து தொடர வேண்டும் என்று தெரியாமல் இருந்தோம்.




இந்திய வர்ண சாதிகளை புரிந்து கொண்டோம். ஆனால் அதன் சூழ்ச்சிகளை குறிப்பாக, நாம் புரிந்து கொள்ளவில்லை.

அம்பேத்கர், பெரியார், காரல்மார்க்ஸ் போன்ற தலைவர்கள் கருத்துக்களை உற்று படிக்கவில்லை. ஆனால் இந்த மூன்று தலைவர்கள் சொன்ன ஒரே கருத்து, கடைசி மனிதன் அமைப்பதுதான் மனிதன் மாண்பு மீட்டு எடுக்க முடியும் என்பதை காலம் கடந்து புரிந்துகொண்டோம்.

ஆகவே, தான் தாழ்த்தப்பட்ட சாதியிலும், வர்ண சாதி சிந்தனை, மேல், கீழ், என்று இருப்பதை புரிந்து கொண்டோம்.

சாதியம் தீண்டாமைகளை கடைபிடிக்கிறது. தீண்டாமை இழிவைக் கடைபிடிக்கிறது. மனிதன் சுயமரியாதை மிற்க முதலில் அவன் மேல் இருக்கும் இழிவை ஒழிப்பது தான் சனநாயகத்தின் முதல் பணி என்பதை ஆதித் தமிழர் பேரவை கற்பித்து வருகிறது.

அனைத்து நிலையிலும், தாழ்த்தப்பட்டு சனநாயகத்தின் கதவுகள் அடைக்கப்பட்டு, மீள முடியாமல் மலக்குழியில் மூழ்கிக்கிடக்கும் அருந்ததிய மக்கள் விடுதலை பற்றி பேசும்போது, அதை பொறுத்துக் கொள்ள முடியாத தலித் தலைவர்கள் இன்னும் இந்துத்துவ கருத்துக்களை உமிழ்ந்து வருகிறார்கள்.

இவர்கள் மத்தியில் நாம் எப்படி தலித் விடுதலை பற்றி பேசுவது என்று பொது நிகழ்ச்சிகளுக்கு போகும்போது நம்மைப் பார்த்து ஏசுகிறவர்கள் தலித் ஒற்றுமை சீர் குலைப்பதற்கு வந்துவிட்டனர்.

உட்சாதி மோதலைத் தூண்டி விடுகிறார்கள் என்று புளிதி வாரித் தூற்றினார்கள்.

இருப்பினும் தலைவர் அதியமான் சொல்லுவார், ஒன்றை கூர்மைப் படுத்தபடுத்தத்தான் அது உடையும் என்பார்.

அதுபோல் எங்களை மாற்றிக் கொண்டு தடைகளை உடைத்து இன்று வேலை செய்து வருகிறோம். மனிதன் மேல் சுமத்தப்பட்டு இருக்கும் இழிவை ஒழிப்பதற்கு அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு, தூய்மைத் தொழிலாளர் மறுவாழ்வு மாநாடு கோவையில் சுமார் 5000



பேர் கலந்து கொண்டு 2004 ஆம் ஆண்டு நடத்தி முடித்தோம்.

அதில் போடப்பட்ட 21 தீர்மானங்களில், கையால் மலம் அள்ளும் இழிவுத் தொழிலை தடை செய்ய வேண்டும் என்று 2005 இல் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் இரயில் மறியல் செய்து 2000 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். இதன் பின் தமிழக அரசால் துய்மை பணியாளர் வாரியம் அமைக்கப்பட்டது. ஆனால் அந்த தொழில் தடைசெய்யப்படவில்லை. இருப்பினும் நாம் சோர்ந்து போகவில்லை.

அதன் பின் மனிதனை மலக்குழியில் இறக்காதே என்று



தொடர் முழக்கப்போராட்டம் சுமார் 2000 பேர் கலந்து கொண்டு சென்னை நகரமே தினறியது. ஆட்சியாளர்கள் காதில் உரைத்தது போல் கோரிக்கை காதில் விழுந்தது. அதன் பின் உயர்நீதிமன்றம் அந்த தொழிலுக்கு தடை போட்டது.

சேரிச் சிறையில் பூட்டி வைக்கப்பட்ட அருந்ததிய மக்களின் வாழ்வு உரிமை மீட்டெடுக்க கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பில் முன்னுரிமை வேண்டுமென்று தலைவர் அதியமான் அவர்கள் 2 ஆண்டுகளுக்கு முன் கோரிக்கை எழுப்பினார். அதன் செயல்தரத்தை விரிவுபடுத்துவதற்கு 2007இல் தேனியில் செயற்குழுவில் தீர்மானம் போடப்பட்டு 2008இல் தமிழகம் முழுவதும் 22 மாவட்டங்களில் உள் இட ஒதுக்கீடு மாநாடு நடத்தப்பட்டு இன்று இருக்கும் திமுக ஆட்சியிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. அதன் விளைவு இன்று 3% உள் இட ஒதுக்கீடு நமக்கு கிடைக்கப்பட்டுள்ளது. இதன் தேவை இன்னும் முழுமை பெறவில்லை.

இருப்பினும் நாம் பின்வாங்கவில்லை. குப்பைக் கூலங்கலாக ஒதுங்கிக் கிடக்கும் அருந்ததியர் மக்களில் அறிவிலும் மங்கி மடிந்து கிடக்கும் பெண்கள் அடிமை நிலையே உடைத்து அவர்கள் விடுதலையே, மண்ணின் விடுதலை என்று 2009 சேலத்தில் உலக மகளிர் நாளில் ஆதித் தமிழச்சிகளின் எழுச்சி மாநாடு சுமார் 3000 பெண்கள் கலந்து கொண்டு மகளிர் விடுதலை கோரிக்கையை எழுப்பியது.

இதனைத் தொடர்ந்து தனது போராட்டத்தில் தடம் பதித்து வரும் பேரவை 2010 ஆம் ஆண்டு அடியெடுத்து வைத்தவுடன் சாலையோரங்களிலும் மழை வெயில் என்று பாராமல் செருப்பு தைக்கும் தொழிலாளர்களின் இழிவு நிலையை ஒழித்து, அவர்களின் மறுவாழ்வு குறித்து மாநாடு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் 14இல் பெரியார் பிறந்த மண்ணில் ஈரோட்டில் மாநாடு நடத்தப்படும்.




மேற்கண்ட தொழிலாளர்களின் ஒருநாள் செருப்பு தைத்தல் மற்றும் அவர்களின் வருமானம் ரூ. 20, ரூ.50 இதை வைத்துக் கொண்டு அவர்களின் குடும்பம் எப்படி இந்த உலக மயமாக்கல் சூழலில் வாழ முடியும். கால் வயிறு கஞ்சி குடிக்கக்கூட உதவாத அந்த வருமானத்தில் எப்படி அவர்கள் குழந்தைகள் கல்வி வாசலில் கால் வைக்க முடியும்.

எனவே, இவர்களின் கோரிக்கை முதன்மைக் கோரிக்கையாக எடுத்து மத்திய அரசு, மாநில அரசிடம் வைத்துள்ளது.



இதன் நோக்கம் நிறைவேறாமல் நம் போராட்டம் ஓயாது. இப்படி நமது போராட்டத்தின் நிலைகளை புரிந்துகொண்டு தமிழக அரசு இந்த கோரிக்கையை உடனடியாக செய்து வருகிறது.

இந்தியாவின் முதல் விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் பகடைக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்படும் என்று கடந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தபோது தமிழக அரசு அறிவித்து இருப்பது நமது அமைப்பிற்கு கிடைத்த வெற்றி.

தோழர்களே! மறைக்கப்பட்ட நமது வரலாற்றையும், புரக்கணிக்கப்பட்ட நமது உரிமையையும் ஒவ்வொன்றாக நமது அளப்பறிய போராட்டத்தின் மூலம் மீட்டெடுத்து வருகிறோம். இருப்பினும் நமது போராட்டம் நீண்ட தூரப் பயணம். சாதியை ஒழிக்காமல் மனிதன் மேல் சுமத்தப்படும் தீண்டாமை இழிவு, வன்கொடுமை ஒழியாது. நமது சொந்தங்கள் மீது நாள்தோறும் தொடரும் வன்கொடுமைகளை முடிவுகட்ட சிறந்ததோர் எதிர்காலத்தை உருவாக்க தற்போது இருக்கும் இன்பத்தை தியாகம் செய்து எந்த மக்களிடம் பிறந்தோமோ, அந்த மக்களின் விடுதலைக்கு தனது நேரத்தை, காலத்தை தியாகம் செய்து வருபவர்கள் பெருமைக்குரியவர்கள் என்பார் அம்பேத்கர்.

அதுபோல் நமது போராட்டத்தில் ஈடில்லா லட்சியம் கொள்ளுங்கள். நம் பக்கம் நியாயம் இருக்கிறது. நமது போராட்டம் ஒருபோதும் தோற்றுப்போகாது. போராட்டம் நம்மை வெற்றியடைச் செய்யும். இழிவை ஒழிக்க இன்னும் ஓர் போர் தொடங்க செருப்பு தைப்போர் மறுவாழ்வு மாநாட்டிற்கு அணி திரள்வோம் வாரீர்! வாரீர்.

தோழமையுடன்
விடுதலை வீரன்.

# ஆதித் தமிழர் பேரவை நடத்தும் இழிவை ஒழிக்க இன்னும் ஓர் போர்



செருப்பு தைப்போர் மறுவாழ்வு மாநாட்டிற்கு
தலைமை ஏற்று நடத்தித்தர வருகைதரும்
சேரித்தமிழன், குடிசைகளின் கூர்வாள்

## இரா. அதியமான்

அவர்களே வருக! வருக!!

ஏப்ரல் 14இல்
மல்லிகை அரங்கம்,
ஈரோடு.

சு.க. சங்கர்
மாநில இளைஞர் அணித் தலைவர்.


சாதி ஒழிப்பே !
சமூக விடுதலை !!
புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாளில் பெரியார் பிறந்த மண்ணில்
ஆதித்தமிழர் பேரவை நடத்தும்
இழிவை ஒழிக்க இன்னும் ஓர் போர்
செருப்பு தைப்போர் மறுவாழ்வு மாநாடு
தலைமை : ஒரு கோடி அருந்ததியர்களின் தலைவர்
அய்யா இரா.அதியமான் நிறுவனர் அவர்கள்
அழைக்கிறார் !
அருந்ததியர் இனமே அலைகடலென
திரண்டு வாரீர் ! வாரீர் !!
ஏப். 14 - 2010
வ.உ.சி. பூங்கா அருகில்,
மல்லிகை அரங்கம், ஈரோடு
வ.எழில்வேந்தன்
மாவட்ட தலைவர்
வே.மு.சந்திரன்
மாவட்ட செயலாளர்
க.அன்பழகன்
மாநகர தலைவர்
பெ.ரவி
சீ.வீரஆதித்யன்
சேலம் மாநகர செயலாளர்
ஆதித்தமிழர் பேரவை
சேலம் மாவட்டம்
சேலம் பிரிண்டர்ஸ் 22 65 444


ஆதித்தமிழர் பேரவையின் கோரிக்கையை ஏற்று
இந்திய விடுதலை போராட்ட அருந்ததிய வீரன்
மாவீரன் ஒன்டிவீரன் அவர்களுக்கு
மணிமண்டபம் அமைக்கப்படும்,
என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்த தமிழக அரசுக்கும்,
தமிழக முதல்வர் டாக்டர்
கலைஞர் அவர்களுக்கும்
அருந்ததியர்களின் நெஞ்சார்ந்த
நன்றி ! நன்றி !! நன்றி !!!
இவண் :
ஆதித்தமிழர் பேரவை



இழிவு ஒழிப்பு போராளியே !

இட ஒதுக்கீட்டுப்

போராளியே !

இரண்டாம் ஒண்டி வீரனே!

வாழும் மதுரை வீரனே!

பெண்ணுரிமைப் போராளியே!

வருக! வருக!!



ஆதித்தமிழர் பேரவை

# ஆதித் தமிழர் பேரவை, ஈரோடு மாவட்டம்.

---



தந்தை பெரியார்
சிறந்த மண்ணில்...





புரட்சியாளர்
அம்பேத்கர்
சிறந்தநாளில்...

# மாநாடு சிறக்க கோரிக்கைகள் வெற்றி பெற வாழ்த்தும்

**தீபா**
மாநில து.பொதுசெயலர்

**சி.களப்பிரர்**
கலை,இலக்கிய அணி தலைவர்

## ஆதித்தமிழர் பேரவை

நடத்தும்
இழிவை ஒழிக்க இன்னும் ஓர் போர்
**செருப்பு தைப்போர் மறுவாழ்வு மாநாடு**
தலைமை
"அருந்ததியர்களின் அறிவாயுதம்"

# இரா. அதியமான்

அருந்ததியர்களே அணிதிரள்வோம்
அய்யா அதியமானின் தலைமையேற்போம்




| | | | |
|---|---|---|---|
| தி.செ.கோபால் | கரு.மாணிக்கம் | கு.சிவா | நா.ராசசேகர் |
| மாவட்ட தலைவர் | மாவட்ட செயலாளர் | மாநகர செயலாளர் | மாநகர து.செயலாளர் |

## ஆதித்தமிழர் பேரவை
## கோவை மாவட்டம்

தொடர்புக்கு: 97503 76650, 95669 72272, 95973 30771, 97914 55881





தூய மனித நேயர், பண்பாளர், தூய சிந்தனையாளர்
அய்யா அதியமான் அறைகூவலுடன் துவங்கிய இந்த பேரவை
நம் மரபின், பண்பாட்டின், அறிவு பாரம்பரியத்தின்
அத்துனை அசைவுகளையும் உள் அடக்கியதாக, நம்
முன்னோர்களின் தலைமுறைத் தலைமுறையாக வந்த
உழைப்பின் சிந்தனையின் விளைச்சலாக பிறந்த ஒன்றல்லவா
நம் இயக்கப் பேரவை. சம நீதியைக் குறிக்கோளாகக்
கொண்டு மக்கள் இயக்கமாக இயங்கிக்கொண்டிருக்கும் இந்த
இயக்கத்தில் உதித்த ஈரோடு மண்ணின் ஆதித்தமிழர் பேரவை
நிறுவனத் தலைவர் **இரா. அதியமான்** அவர்களின் தலைமையின்
கீழ் இந்தியாவின் வரலாற்றில் மாபெரும் மாற்றத்தை
அகில இந்திய செருப்புத் தைக்கும்தொழிலாளர்
மாநாடு நம் லட்சியங்களை நிச்சயம் வென்றெடுக்கும்,
வென்றெடுக்கும் என்று வாழ்த்துகிறேன்




இங்ஙனம்,
ஒண்டிவீரன் வழிதோன்றல்
மதுரை **சித்தார்த்தன்,** வழக்கறிஞர்.
மாநில அமைப்புச் செயலாளர்.








*இழிவைப் போக்கி*
*சாதிபேதத்தை*
*வேரறுக்க போராடிய*
*தந்தை பெரியார் பிறந்த*
*மண்ணிற்கு வருகை தரும்*
*நிறுவனர் அய்யா*
**அதியமான்** *அவர்களே*
*வருக! வருக!!*



ச. தமிழ் வீரன்,
மாநில துணைப் பொதுச்செயலாளர்.

## ஆதித் தமிழர் பேரவை,







பெண்ணடிமை
ஒழிக்க போராடிய
ஈ.வெ.ராமசாமி
பிறந்த ஈரோடு மாநகருக்கு
வருகை தரும் அருந்ததியரின்
**குல விளக்கே**
வருக! வருக!!





இராணி,
மாநில துணைப் பொதுச் செயலாளர்.
பிரபாவதி
சந்தானலட்சுமி

## ஆதித் தமிழர் பேரவை,
## திருச்சி மாவட்டம்.


குடிசைகளின் கூர்வால்
அடிமை விலங்கை உடைத்தெரிய
பெண் அடிமை ஒழிக்க வந்த
பெண் போராளியே!
இட ஒதுக்கீட்டு நாயகனே!
இழிவு ஒழிப்புப் போராளியே!
அருந்ததியர்களின் குல விளக்கே!
ஈரோடு மாநகர் நீங்கள் வருவதால்
ஈரோடே பெருமை அடைகிறது.
அய்யா
அவர்களே
வருக!
வருக!!
துரை அமுதன்,
மாவட்டச் செயலாளர்.
முல்லை அரசு,
மாவட்டத் தலைவர்.
சுப்பிரமணி,
தாந்தோணி ஒன்றிய
இளைஞர் அணி.
ஆதித் தமிழர் பேரவை, கரூர் மாவட்டம்.


அரை கோடி
அருந்ததியர்களின்
அறிவாயுதமே
வருக!
வருக!!
கருப்புசாமி,
மாவட்டத் தலைவர்.
தமிழ்வேந்தன்,
மாவட்டச் செயலாளர்.
நல்லசாமி,
இளைஞர் அணி.
ஆதித் தமிழர் பேரவை,
திருப்பூர் மாவட்டம்.


ஆதித் தமிழச்சிகளின்
எழுச்சி நாயகன்
அய்யா
அதியமான் அவர்களே
வருக!
வருக!!
முத்துராக்கு,
மாநில மகளிர் அணி
தலைவர்.
வசந்தி,
மாநில மகளிர் அணி
செயலாளர்.
ராமாயி அம்மாள்,
மகளிர் அணி.
ஆதித் தமிழர் பேரவை,
மாநில மகளிர் அணி.


அருந்ததியர்களின்
லட்சியம்
வெல்வது
நிச்சயம்
ஆதித் தமிழராய்
ஒருங்கிணைவோம்
அதியமான்
தலைமையில்.
வேங்கைமார்பன்,
மாவட்டச் செயலாளர்.
தமிழ்தேசியன்,
மாவட்டத் தலைவர்.
ஆதித் தமிழர் பேரவை,
நாமக்கல் மாவட்டம்.







# அம்பேத்கர், பெரியார் வழியில் நீங்கள்

# உங்கள் வழியில் நாங்கள்...



இட ஒதுக்கீட்டுப்போராளி

# இரா. அதியமான்

அவர்களே

வருக!

வருக!!



முகிலன்
அரசு ஊழியர் சங்கச் செயலாளர்




எழிப்புத்தன்
அரசு ஊழியர் சங்கத் தலைவர்.



மணியரசு
அரசு ஊழியர் சங்க நிதிச் செயலாளர்


---


## பேரவையின் வெளியீடுகள்


























**புத்தகங்கள் கிடைக்கும் இடம் :**

அம்பேத்கர் அறிவகம், வடவள்ளி, கோவை.

இணைதள மூலமாகவும் புத்தகங்களைப் பார்க்கலாம்.

www.aathithamizharperavai.com





# ஆதித் தமிழன்

## செருப்பு தைப்போர் மறுவாழ்வு மாநாடு சிறப்பு மலர்







**இடம் :**
**மல்லிகை அரங்கம்,**
**வ.உ.சி. பூங்கா அருகில்,**
**ஈரோடு.**

**நாள் : 14.04.2010**